# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

மனு எண். 1382/2016/பே
ஆணை நாள். 31 –12 –2018

ஆணை.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மண்டலத்தில் பணிபுரியும் சில பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக பணியாளர்கள் மீது நாளிடப்படாத, மற்றும் முகவரியில்லாத சுமா என்ற பெயரிலான புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.10.2018 அன்று பெறப்பட்டு, மேற்படி மனுவிற்கு 1382/2018 என எண்ணிடப்பட்டது. மேற்படி மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

இம்முறைமன்ற நடுவ 29.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி புகார் மனுவின் நகல் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அம்மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 04.12.2018 நாளிட்ட அறிக்கையில் புகார் மனுவில் தெரிவித்துள்ள திருமழிசை, நாரவாரிகுப்பம், பொதட்டூர் பேட்டை, மற்றும் மீஞ்சூர் பேரூராட்சி செயல் அலுவலர்களிடம் 19.11.2018ல் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி விசாணையின் அடிப்படையில் செயல் அலுவலர்கள் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும், செயல் அலுவலர்களது நற்பெயரினை கெடுக்கவேண்டும் என்ற உள் நோக்கத்தோடும் முகவரியில்லாத புகார் மனுவில் பொய் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்காணும் புகார் மனுவின் மீது தொடர் நடவடிக்கை கைவிடப்படலாம் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 29.11.2018 நாளிட்ட அறிக்கையில், மேற்படி புகார் மனு தொடர்பாக, புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள செயல் அலுவலர்கள் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக பணியாளர்கள் ஆகியோரிடம் 19.11.2018 அன்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக பணியாளர்கள் அனைவரும் புகார் மனுவில் தெரிவித்துள்ள

அனைத்து புகார்களையும் மறுத்துள்ளதாகவும், மேற்படி புகாரில் வேண்டுமென்றே காழ்ப்புணர்ச்சியின் காரணமாக உண்மைக்கு புறம்பான புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அலுவலர்களால் விசாரணையின்போது வாய் மொழியாகவும், எழுத்து மூலமாகவும் தெரிவிக்கப்பட்டதாகவும் எனக் குறிப்பிட்டு மேற்படி புகார் மனு மீதான நடவடிக்கையினை கைவிடக் கோரிய எழுத்து மூலமான வாக்குமூலங்களையும் தனது அறிக்கையுடன் இணைத்து இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி புகார் சம்பந்தமாக புகார்தாரரை விசாரிக்க போதிய முகவரி இல்லாத நிலையில் மேற்படி புகாரினை விசாரணை அறிக்கையின் அடிப்படையில் ஆதாரமற்றது எனக் கருதி தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–// ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 2/1/2019

2/1/19

பெறுநர்:

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   திருவள்ளூர் மண்டலம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
   திருவள்ளூர்.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   காஞ்சிபுரம் மண்டலம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   காஞ்சீபுரம்.